# தலை மற்றும் கழுத்து அறுவை சிகிச்சைக்குப் பிறகு வடிகாலுடன் வீட்டிற்குச் செல்வது

## வடிகால் என்றால் என்னஇ அதை எதற்காக பயன்படுத்த வேண்டும்?

- வடிகால் என்பது அறுவை சிகிச்சை செய்த இடத்திலிருந்து வெளிவரும் திரவத்தை வெளியேற்ற பயன்படுத்தும் ஒரு குழாய் ஆகும். இது அறுவை சிகிச்சை செய்த இடத்தில் இருக்கும் காயத்தின் வீக்கத்தை குறைத்து காயம் விரைவாக குணமடைய உதவுகிறது

- அறுவை சிகிச்சை செய்த இடத்தில் இருக்கும் காயத்தில் இருந்து வெளிவரும் திரவத்தின் அளவை பொறுத்து வடிகால்களை வைத்திருக்கலாம் அதாவது வெளியேறும் திரவத்தின் அளவு குறைவாக இருந்தால் ஐந்து நாட்கள் வரை வடிகால்களை வைத்து கொள்ளலாம்

## ஏன் வடிகாலுடன் வீட்டிற்கு செல்ல ஊக்குவிக்கிறார்கள்?

- அறுவை சிகிச்சைக்கு பிறகு 1 முதல் 2 நாட்களுக்குப் பிறகுஇ நோயாளிகள் பெரும்பாலும் தாங்கள் சுயமாக நடப்பதற்கும் சாப்பிடுவதற்கும் தங்களை கவனித்து கொள்வதற்கும் முடியும்
- அறுவை சிகிச்சை முடிந்து சில நாட்களில் மருத்துவ மனைக்கு சென்று வடிகாலை அகற்றிக்கொள்ளலாம்.
- வடிகால் பராமரிப்பு சிரமமற்றது மற்றும் உபயோகிப்பதற்கு சிக்கல் அற்றதாகவும் இருக்கும். மேலும் நீங்கள் அதிக நாட்கள் மருத்துவமனையில் இருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் விரைவாகவே வீடு திரும்பி உங்கள் க குடும்பத்தினருடன்நேரத்தை செலவிடலாம்

## என்னுடைய வடிகால்களை எவ்வாறு கவனித்து கொள்ள வேண்டும்?

1. வடிகாலின் பகுதிகளுக்கு கீழே உள்ள வரைபடத்தைப் பார்க்கவும்




*படங்கள் உபயம் டாக்டர் லி ஹவ்*

2. வடிகாலை எப்படி பொருத்துவது மற்றும் எப்படி எடுத்து செல்வது என்பதற்கு கீழே உள்ள படங்களை பார்க்கவும்



கழுத்தில் வடிகால் தட்டுதல்



உங்களுடன் வடிகால் சுமந்து செல்லுதல்

*படங்கள் உபயம் டாக்டர் லி ஹவ்*

**செவி,நாசி, தொண்டையியல் துறை, சிகிச்சையகம் 1B,**
TTSH மருத்துவ மையம், முதல் தளம், தொ.பே.68804180, அலுவலக நேரம் (காலை 9 முதல் மாலை 5 வரை)
PECC-ENT-ED-2021-1133T-v1

## வடிகாலில் ஏற்பட கூடிய பொதுவான சில பிரச்சனைகள் மற்றும் எவ்வாறு அவற்றை சரி செய்வது?

1. <u>உறிஞ்சும் தன்மை இழப்பு</u>

   – அறுவை சிகிச்சை செய்த இடத்தில் இருந்து திரவத்தை வெளியேற்றுவதற்காக வடிகாலில் ஒரு வெற்றிடம் உருவாக்கப்படும்.
   – அறுவை சிகிச்சை நிபுணர் இந்த வெற்றிடம் இவ்வாறு இருக்க வேண்டாம் என்று சொல்லாமல் இந்த வெற்றிடம் இழக்கப்படக்கூடாது
   – வெற்றிட காட்டி விரிவடைந்தால் (கீழே உள்ள படத்தைப் பார்க்கவும்)இ வடிகால் பாட்டிலில் உள்ள வெற்றிடம் இழக்கப்படலாம் என்று அர்த்தம். அவ்வாறு நடக்கும் பட்சத்தில் மருத்துவமனைக்கு உடனடியாக செல்ல வேண்டும். 1B at Tan Tock Seng Hospital (Monday to Friday, 9.00 am – 5.00 pm) அல்லது Tan Tock Seng Hospital Emergency Department (அலுவலக நேரத்திற்கு பிறகு அல்லது வார இறுதி நாட்கள்). அங்கு இருக்கும் மருத்துவர்கள் அல்லது செவிலியர்கள் உங்களுக்கு உதவுவார்கள்



வெற்றிடத்தை இழந்தால் உறிஞ்சும் காட்டி விரிவடைகிறது.

2. <u>வடிகால் இறுக்கப்பட்டுள்ளது எனில்:</u>
   – அறுவை சிகிச்சை செய்த இடத்தில் இருந்து வெளியேறும் திரவத்தை அனுமதிப்பதற்கு வடிகால் இறுக்கப்படாமல்இருக்க வேண்டும்
   – ஒரு வேலை வடிகால் இறுக்கமாக இருப்பதாக நீங்கள் உணர்ந்தாலோ அல்லது கண்டாலோ அதை உடனடியாக அகற்ற வேண்டும் (கீழே உள்ள படத்தைப் பார்க்கவும்)



தவறு: வடிகால் அடைக்கப்பட்டுள்ளது



சரி: வடிகால் அடைக்கப்படவில்லை

*படங்கள் உபயம் டாக்டர் லி ஹவ்*

3. <u>வடிகால் குழாய் துண்டிக்கப்பட்டால் செய்ய வேண்டிய செயல் முறை:</u>
   - வடிகால் குழாய் பாட்டிலுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
   - அவ்வாறு இல்லாமல் தற்செயலாக துண்டிக்கப்பட்டு இருந்தால்இ இரண்டு முனைகளையும் ஆல்கஹால் துடைப்பான் அல்லது சுத்தமான துண்டு கொண்டு சுத்தம் செய்ய வேண்டும் அதற்கு பின்பு இறுக்கமாக திருகவேண்டும்



வடிகால் மீண்டும் இணைக்க,

ஆல்கஹால் துடைப்பம்/சுத்தமான

துண்டுடன் அவற்றை சுத்தம் செய்த

பிறகு மீண்டும் இறுக்கமாக திருகுங்கள்.

4. <u>வடிகால் பாட்டில் நிரம்பியிருந்தால் செய்ய வேண்டிய செயல் முறைகள்:</u>
   - வடிகால் பாட்டில் நிரம்பி விட்ட பட்சத்தில்இ வடிகால் பாட்டில்களை மாற்ற வேண்டும். இவ்வாறு நிகழ்வது மிகவும் அரிதாகும்
   - உங்கள் வடிகால் பாட்டில் நிரம்பியிருந்தால்இ உடனடியாக மருத்துவமனைக்கு சென்று பார்வையிடவும் டன் டாக் செங் மருத்துவமனை, சிகிச்சையகம், 1 பி (நேரம்: காலை 9.00 - மாலை 5.00, திங்கள் முதல் வெள்ளி) அல்லது டன் டாக் செங் மருத்துவமனை, அவசர துறை (அலுவலக நேரத்திற்கு பிறகு அல்லது வார இறுதி நாட்கள்).

**எனக்கு உதவி தேவைப்பட்டால் நான் யாரைத் தொடர்பு கொள்ள முடியும்?**

**நேரம்: காலை 9.00 - மாலை 5.00, திங்கள் முதல் வெள்ளி**

இடம்: டன் டாக் செங் மருத்துவமனை, சிகிச்சையகம், 1 பி தொலைபேசி எண் : (+65) 6889 4180.

**நேரம்: மாலை 5.00 - காலை 9.00, திங்கள் முதல் வெள்ளி வரை மற்றும் வார இறுதி நாட்களில்**

இடம்: டன் டாக் செங் மருத்துவமனை, அவசர துறை அல்லது டன் டாக் செங் மருத்துவமனையை தொடர்பு கொள்ளவும். ENT மருத்துவ அதிகாரியுடன் பேசுவதற்கான தொலைபேசி எண் (+65) 6256 6011